செய்தித் தாளாகப் பதிவு பெற்றது

உ
சிவமயம்

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

JAFFNA COLLEGE
21 NOV 1972
UNDERGRADUATE LIBRARY

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

ஆரம்பம்: விரோதி ஸு (1889) ஆவணிமீ 28-ம் உ. அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450. காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். பிரதிவிலை: சதம் 15

புத்-அச] யாழ்ப்பாணம்: பரிதாபிஸு ஐப்பசி மீ உரு உ வெள்ளிக்கிழமை (10-11-1972) [இல:ரு௧ தொலைபேசி: 356

# தமிழ் மொழி உபயோகத்தைக் கட்டுப்பாடின்றி உபயோகிக்க அநுமதி வழங்குங்கள்!

## ஒற்றுமைக்கு இது வித்து

அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்த தமிழ்ப் பிரமுகர்களிடம் கலந்துரையாடிய மூன்று சிங்களப் பெரியார்களை உறுப்பினராகக் கொண்ட உபகுழு அரசாங்கத்துக்குத் தமிழ் மொழியுரிமையைப்பற்றி யோசனை கூறியுள்ளது. திருவாளர்கள்: ஆர். எஸ். எஸ். குணவார்த்தனு, தேவசூரியசேனு, டி. பி. ஏலப்பொலே ஆகிய மூவரும் ஷை உபகுழுவின் அங்கத்தவர்கள் ஆவர்.

நாட்டினது பொருளாதார விருத்திக்கும் இன ஒற்றுமைக்கும் உதவக்கூடிய வகையில் ஒவ்வொரு பிள்ளையினுடைய கல்வியும் தாய் மொழியில் ஊட்டப்படுதல் வேண்டும். சிங்கள மொழியையோ தமிழ் மொழியையோ ஒவ்வொரு பிள்ளையும் இரண்டாம் பாஷையாகக் கற்றல் வேண்டும். ஆங்கிலத்தை மூன்றாம் பாஷையாக விரும்பியவர்களுக்குக் கற்பிக்கலாம்.

தமிழ் மொழி உபயோகம் மந்திரிமார்களின் உத்தரவின்படி நீதிமன்றங்களில் இயங்கி வருகின்றது. ஆனால் தமிழ்

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்

அரசியல் அலை

## வரப்போகின்றதென்றது வந்தேவிட்டது?

### சீனியோ சீனி—பழுப்புக்குப்பழுதில்லை! நாடெங்கும் இதே பேச்சு!

வெள்ளைச் சீனி இனிமேல் மேல் வகுப்பாருக்கே! பொது மனிதன் (ஏழை) அந்தக் கபிலநிறக் கலவைச்சீனி போதும் என்றிருக்க வேண்டும்! 'சம சமுகம்' என்ற கருத்துடைய "சோஷலிசம்" புகட்டும் பாடம் இதுவென்று கலாநிதி பெரேரா அவர்கள் கொணர்ந்த புது அதிர்வேட்டுக் காட்டுகின்றது!

(வளர்ச்சி 4-ஆம் பக்கம் )

## சக்தியின் பெருமை

(சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை கொக்குவில்)

உலகில் உள்ள உயிர்கள் யாவும் அம்மை அப்பரையுடையனவே. அம்மையப்பரையின்றி உயிர்கள் இல்லை ஓருயிர்க்குத் தாய் தந்தையராய் இருப்பவரும் தங்களுக்கு ஒரு தாய் தந்தையரை உடையரேயன்றித் தாய் தந்தையில்லாதவரல்லர். தமக்குத் தாய் தந்தை இல்லாது தாமே எல்லா உயிர்க்கும் முதல் தாய் தந்தையராய் உள்ளவர் இருத்தல் வேண்டுமன்றோ? அவ்வாறு எல்லா உயிர்க்கும் தாய் தந்தையராய் அம்மையப்பராய் இருப்பவரே பரம்பொருள். இறைவனே தாயும் தந்தையுமாய் உள்ளான் என்பதைத் திருமுறைகளில் காண்கின்றோம் திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் இறைவனை அவ்வாறு கூறி வேண்டுகின்றார்.

தாயும் நீயே தந்தை நீயே

சங்கரனே யடியேன்
ஆயு நின் பால் அன்பு செய்வான்
ஆதரிக்கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள் ஐவர்
நின்று ஒன்றலொட்டார்
மாயமே யென்றஞ்சு கின்றேன்
வலிவலம் மேயவனே.

எல்லையறு பரம்பொருளின் இரு கூறுகளே சிவமும் சக்தியும் எனலாம். சிவம் இருந்தபடி இருந்து பிரகாசிக்கச் சக்தி தொழிற்படுத்துகின்றது சிவமும சக்தியுமாகிய பரம்பொருள் வடிவத்தை அம்மையப்பராக வழிபடும் பெருமை சைவசமயிகளுக்கே உண்டு. மணிவாசகப் பெருமான் "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று கூறியுள்

வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ
சிவமயம்
யார்க்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி

திருச்சிற்றம்பலம்

கோலமா மஞ்ஞை தன்னிற்
குலவிய குமரன்றன்னைப்
பாலனென் றிருந் தேனந் நாட்
பரிசிவையுணர்ந்திலேன்யான்
மாலயன்றனக்கு மேனைவானவர்தமக்கும் யார்க்கு
மூலகாரணமாய் நின்ற
மூர்த்தியிம் மூர்த்தியன்றோ
திருச்சிற்றம்பலம்

—கச்சியப்பர்.

## கீரிமலைப் பிதிர்க்கடன் செய்யும் மடாலயப் புனருத்தாரண வேலை

சென்ற சில மாதங்களுக்கு முன் இப்பத்திரிகையில் கீரிமலைப் பிதிர்க்கடன் செய்யும் மடாலயப் புனருத்தாரணத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். ஷை மடாலயத் தர்மகர்த்தா சிவஸ்ரீ. ச. தற்பரானந்தக் குருக்கள் புனருத்தாரணத்திற்கு நிதி உதவும்வண்ணம் சைவமக்களுக்கொரு விண்ணப்பம் செய்ததின் பயனாக மடத்தின் ஒரு பகுதி திருத்தக்கூடியதாகப் பொருள் சேர்ந்துள்ளது.

எஞ்சிய வேலையைத்

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்

நல்லூர்ச் சிவன் கோவிலில் இன்று மாலை

## அந்தகனைக் காலினால் உதைத்த உற்சவம்



யாழ். நல்லைச் சிவன் கோவிலில் ஐப்பசிக் கடைசி வெளளியாகிய இன்று (10-11-72) பிற்பகலில் யமசம்ஹாரஉற்ஸவம் வெகு சிறப்பாக நிறைவு பெறும். ஈழத்தில் இந்தக் கோவிலில் மட்டுமே இத் திருவிழா நடைபெறுவதாகவும், தமிழகத்தில் திருக்கடவூர்த் திருத்தலததிலும் நிகழ்வதாகவும் அடியார்கள் பேசிக்கொள்கின்றார்கள். நாட்டின் நாலாபுறத்திருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இன்றைய விழாத தரிசனத்துக்கு வருவார்கள்.

இன்றைய தினம் நிகழவிருக்கும் இந்த அருள்விழா நிகழ்ச்சிபற்றிய நேர்முக ஒலிப்பதிவு வர்ணனையைத் தொகுத்து ஒலிபரப்ப இலங்கை ஒலிபரப்

( வளர்ச்சி 4-ஆம் பக்கம்

## நன்றி நவில்கின்றோம்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் அகில இலங்கை ரீதியில் நடாத்திய 1972-ஆம் ஆண்டு சமய பாடப் பரீட்சை நவம்பர் மாதம் 5ஆம் திகதி குறித்தபடி சிறப்பாக நடைபெற்றது.

பெருந்தொகையான மாணவர்கள் இதிற்பங்குபற்றினர்

இப் பரீட்சையைத் திறம்பட நடத்துவதற்கு உதவிய பரீட்சை மேற்பார்வையாளருக்கும் உதவியாயிருந்தவர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவருக்கும் சபையின் நன்றி உரியதாகுக.

சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

## விநாயகர் சஷ்டி விரதம்

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளால் நிகழும் பரிதாபி ஸு கார்த்திகை மீ 6 உ (21-11-72 செவ்வாய்க்கிழமை முதல் 21 நாட்கள் வரை விநாயகர் சஷ்டி விரதம் அநுட்டிக்கப்பெறும். அன்பர்கள் அனைவரும இக்காலங்களில் விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்களாக

**நிகழ்ச்சிகள்**

தினமும் மாலை 6 30 மணிக்கு அபிஷேக ஆராதனை
7.00 ,, பிள்ளையார் கதை விநாயகர் புராணம் [படித்தல்
7-45 ,, விசேட பூசை
11-12-72 விநாயகர்சஷ்டியன்று இரவு 8மணிக்கு பஞ்சமுகார்ச்சனை நடைபெறும்.

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினம் இவ்வாண்டு கார்த்திகைத் திங்கள் 12 ஆம் நாள் (27-11-72) திங்கட்கிழமையாகும்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்து சாதனம்

பரிதாபி ஞூ ஐப்பசி மீ" உடு-உ வெள்ளிக்கிழமை [1972]

# திருவடிக்கே தொழும்பு செய்வோம்

முருகப் பெருமான் வேற்படையினல் சூரபன்மனின் உடலைப் பிளந்து மயிலில் வீற்றிருந்தருளிய வைதத் திருமால் நான்முகன் முதலிய தேவர்கள் கண்டு பெரு மகிழ்ச்சியெய்தினர். ஆடிப் பாடினர். புளகாங்கிதம் கொண்டு மலர் மாரி பெய்தனர்.

வேற்படையை விடுத்துச் சூரபன்மனைச் சங்கரித்தது மல்லாமல் தங்களுடைய வினையின் வேரையும் அறுத்தனனெனப்புகழ்ந்தார்கள். "துன்பங்களினின்று நீங்கினேம். அவர்கட்கு ஏவல்செய்யும் பழியினின்றும் நீங்கினேம். வேத நெறியையும் பழைய செல்வங்களையும் பெற்றுவிட்டோம். இனி எமக்கோர் குறைவுயில்லை. நீங்கிப் போன உயிர் மீண்டுவந்த தன்மையையடைந்தோம்" என்று கூறி மகிழ்ந்தார்கள்,

"செய்யு மவனும் புலனுஞ் செய்வித்து நிற்போனு
மெய்த வரும்பொருளும் யாவையும் நீயேயென்கை
யையவடியேங்க ளறிந்தன மாலன்னதால்
வெய்ய பவமகன்று வீடினிக் கூடினமால்.

காண்பானும் காட்சியும் காட்டுவானும் காட்சிப்பொருளும் ஆகிய இவையெல்லாம் தேவரீரே என்பதை எம்பெருமானே! அடியேங்கள் கண்டு கொண்டோம். இனிக் கொடிய பிறவியினின்றும் நீங்கி மோட்சத்தையும் அடைவோம். அடியேங்களைக் காத்தருளினீர்; மேலாகிய தேவரீருடைய திருவடிகளுக்கே தொண்டு செய்வோம்.

ஈண்டே யெமருக்கிடர் செயவுணரேலா
மாண்டே விளியும் வகை புரிந்து காத்தனையால்
வேண்டே மினியாது மேலாய நின்கழற்கே
பூண்டேந் தொழும்பு புகழேம் பிறர்தமையே.

திருவடியன்பே சகல செல்வங்களையும் தரும். கல்விச் செல்வம் பொருட் செல்வம் முதலியவற்றையெல்லாம் இவ்வுலகிலீந்து மறுமைக்கு முத்தியையும் நல்கும்". இவ்வாறு தேவர்கள் போற்றினார்கள். தேவர்கள் சிவனை மறந்து தக்கன் செய்த யாகத்தில் பங்குபற்றி அவியுணவருந்தினமையால் இவ்வளவு கஷ்டப்பட்டார்கள். பின்பு சிவபெருமான் தமது திருக்குமாரரையனுப்பி சூரன் முதலியோரைச் சங்கரித்து தேவர்களைச் சிறை மீட்டார். அப்பொழுது தேவர்கள் முருகப் பெருமானை வணங்கினார்கள்.

"சுவாமி! எங்களையெல்லாம் அழிவு செய்த அவுணர்களை அழித்தருளினீர்; எங்களைக் காத்தருளினீர். உமது திருவடிகளுக்கே தொழும்பு செய்வோம்; பிற தெய்வங்களைப் புகழமாட்டோம்" இவ்வாறு கூறித் துதித்தார்கள்.

சகல செல்வ யோக முத்தி தரக்கூடிய முருகப் பெருமானுடைய திருவடிக்கு மீளா அன்பைச் செலுத்துவோமாக.

## அணிந்துரை அரங்கம்

இலவசவெளியீடு:
**கந்தவிரதம் துதிப்பாடலும் கந்தசஷ்டிகவசமும்.**

தொகுத்து எழுதியவர்: சிந்தாந்த வித்தகர் கயபாக்கம் திரு. சோமசுந்தரச் செட்டியார் அவர்கள். வெளியிடுவோர் மில்க்வைற் சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம். — 0 —

**சிலாங்கூர் இலங்கைச்சைவர் சங்கம் கோலாலம்பூர்.**

46 வது வருடாந்த அறிக்கைப் பத்திரமும் வரவுசெலவுக் கணக்குகளும் (1-4-71 முதல் 31-3-72 வரை) கிடைக்கப்பெற்றோம்.

யாழ். அரசுச் சிறைச்சாலையில்

## சைவ சமயப் பணிகள்

யாழ்/ அரசினர் சிறைச்சாலையில உள்ள முருகன் கோவிலில் கந்தசட்டி காலத்தில் விசேஷ பூசை கந்தசஷ்டி கவசம் என்பன நடைபெறும்.

12-11-72 ஞாயிற்றுக் கிழமை "கந்தசஷ்டி கவசம்" என்னும் பொருள்பற்றி காலை 9 மணியளவில் உபந்நியாசம் நிகழும்.

x x

## தீபாவலியின் தத்துவம்

யாழ்/ அரசினர் சிறைச்சாலையில் உள்ள முருகன் கோவிலில் தீபாவளித் தினத்தன்று விசேட பூசைவழிபாடு நடைபெற்றது. இந்துசமயக்கைதிகள் பலர்கலந்து கொண்டனர்.

சைவப்புலவர் திரு. வ. கந்தசாமி ஆசிரியர் தனது உபந்நியாசத்தின்போது பின்வருமாறுகுறிப்பிட்டார்.

மனிதனை மனிதனக வாழச்செய்வது சமயம். துன்பம் கலந்த உலகவாழ்க்கையை இன்பவாழ்வாக ஆக்குவது சமயம். சமயம் ஒழுக்க நியதியுடையது நம்முடைய பண்டைத் தமிழ்ச் சைவமக்கள் சைவசமயத்தின் புண்ணியகாலங்களை விசேடமாகக் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு புண்ணிய காலத்திற்கும் முக்கியமான தத்துவக் கருத்துக்கள் உள.

அதர்மத்தைஒழித்துத்தர்மத்தை நிலைநாட்டவே நரகாசுரனை அழித்தார் விஷ்ணு எனத் தீபாவளி பற்றிப் புராணக் கதை கூறுகின்றது. இத் தீபாவளியின் நோக்கத்தை நன்றாக ஆராய்ந்து அறிந்து சமயப் பெருவிழவாக நடாத்த வேண்டும். இத்தினத்தில் பாவச் செயல்களுக்கு சிறிதேனும் இடம் அளிக்கக் கூடாது எனக் குறிப்பிட்டார். (ந. நி)

## யாழ்ப்பாணத்தில கலை விழா

1973 ஜனவரி மாதத்தில் ஒரு கலைவிழாவை நடத்த யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் ஏற்பாடு செய்கின்றனர். தென்னிந்தியாவிலிருந்து பிரபல நடிகர் ஜெமினி கணேசன் விழாவில் பங்குபற்றுவரென அறிகின்றோம். விழாவில் சேரும் நிதி யாழ்ப்பாண மாநகர சபையால் அமைக்கவிருக்கும் நீச்சல்தடாகத்திற்கு உபயோகிக்கப்படுமாம்.

திருக்கோயில்களுக்கு

# அஷ்டபந்தனம் அவசியம் தேவை

## மதுரை ஆதீனத்துக்குச் சொந்தமான திருப்புறம்பயம் ஸ்ரீ சாக்ஷிநாத சுவாமி கோயில் மகாகும்பாபிஷேக விழாவில் திருத்தருமை ஆதீனம் குருமணிகள் அருளுரை

*["இந்துசாதனம்" அபிமான நிருபர்*
*[திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]*

திருக்கயிலாய பரம்பரைத்தரும புரம் ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சண்முகதேசி ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஸ்ரீ அம்பாள் கோவிலின் புதிய நுழை வாயிலைத் திறந்து வைத்து அருளுரை வழங்குகையில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருக்கோயில்களுக்கு மகா கும்பாபிஷேகங்கள் செய்விக்கவேண்டும், இயலாத கோயில்களில்களில அஷ்டபந்தனம் சார்த்தியாவது கும்பாபிஷேகம் செய்விக்க வேண்டும், கோயில்களில் திருவுருவங்கள அஷ்டபந்தமை இல்லாமல் இருத்தல்கூடாது, 12 ஆண்டுகளுக்கு ஓர் முறை மின்சாரசாதனங்களை வீடுகளில புதுப்பிக்கிறோம், பழுதுபட்டுள்ள மின்சார சாதனங்களைப் புதுப்பிக்கிறோம் அவ்வாறு செய்யத் தவறினுல் அதன்வழியில் கிடைக்கும் ஒலி, ஒளி, காற்று முதலியவற்றைப் பெறுதல் முடியாது, அதுபோல அஷ்டபந்தனம் இல்லாத கோயில்களில் தேங்கி நிற்கும் தெய்வீக ஆற்றலை நாம பெறுதல் இயலாது என்றும் அருளுரையில் அருளினார்கள்.

ஸ்ரீ ல ஸ்ரீ குருமணிகள் அவர்கள் மேலும் அருளுரை வழங்குகையில் அஷ்டபந்தனம் இல்லாத மூர்த்திகளில தெய்வீக ஆற்றல நிலைபெருது, ஓட்டைக் குடத்தில தண்ணீர் தேக்கிவைத்தல் முடியாது ஆகவே அஷ்டபந்தனம் தெய்வீக மூர்த்திகளுக்கு இன்றியமையாதது, மின்னல் ஆற்றல் தேங்கிநிற்கும் நிலையங்கள போலவும் அணைக்கட்டுகளில் தண்ணீர் தேங்கி நிற்குமாறு போலவும் தெய்வீக ஆற்றல தேங்கி நிற்கும் இடங்கள் திருக்கோயில்களாகும் இதனை உணர்ந்து மக்கள் இறையருள் பெறத் திருக் கோயில்களுக்குச் சென்று இறைவனின்திருவருளைப் பெறுதல இன்றியமையாததாகும் என்றும அருளுரையில் கூறினார்கள்.

ஸ்ரீ ல ஸ்ரீ குருமணிகள் திருக் கோயிலுக்கு வருகை புரிந்த உடன முறைப்படி பிரசாதம் வழங்கி பூரணகும்பங்களுடனும் மங்கள இசைகளுடனும் நிர்வாகிகள், ஆஸ்திக பெருமக்கள் கூடிச் சிறப்பாக அவரை வரவேற்றார்கள்.

இங்குள்ள மதுரை ஆதீனம் திருமடத்திற்கு தருமை ஆதீனம் ஸ்ரீ ல ஸ்ரீ குருமணிகள எழுந்தருளினார்கள். அங்கு மதுரைஆதீனம ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள தருமைஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமணிகளை வரவேற்று இரு குருமணிகளும் சிறிதுநேரம் அளவளாவி உரையாடி மகிழ்ந்து திருக்கோயிலுக்கு எழுந்தருளினார்கள்.

## சக்தியின்......

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

ளதும் இதனையுணர்த்துகின்றது. சைவர்களே அம்பிகையாகிய சக்தியைச் சிவபெருமானோடு ஒரு நிகராகக் கொண்டு வழிபட்டு வருவது உலகம் அறிந்தவொன்று.

அண்டசராசரமெல்லாம் ஆட்டிப்படைக்கும் இச்சக்தியைப் பரம்பொருளின்கருணை என்பர். அருளது சக்தியாகும் என்பது சித்தியார்வாக்கு. கண்ணால் கண்டும், காதால் கேட்டும் அறிய முடியாத சத்தியின் வடிவம்அத்தன்மைத்தாகவே இருக்கும் என்பதற்கு ஐயமுளதோ? சிவஞான சித்தியார் "சக்தியின் வடிவே தென்னிற்றடையிலா ஞானமாகும், "என்று கூறி உள்ள ஞானத்தை உணர்ந்து கொள்வது போல் சக்தியின் வடிவத்தையும் உணர்ந்து கொள்ளலாம்.

சக்தியின் வடிவத்தைஉணர்ந்து அனுபவித்த அநுபூதிமான்கள் நம் சமயத்தில் பலர் உளர். திருமுறைச் செல்வராகிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தமது முதற்பாட்டிலேயே "தோடுடைய செவியன்" என்று அடியெடுத்து அம்மையப்பன் கோலத்தைய முதற்கண் கூறியருளினார். தேனும் பாலும் டலாச்சுவையும் கலந்ததெனத் தித்திக்கும் திருவாசகம்தந்த மணிவாசகப் பெருமானார் பரம் பொருளாகிய இறைவனின் தொன்மைக் கோலத்தை எமக்கு நினைவூட்டுகின்றார்.

தோலும் துகிலும் குழையும்
அருள் தோடும்
பால் வெள்ளை நீறும்
பசுஞ் சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையும்
உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்
தூதாய் கோத்தும்பீ.

(வளர்ச்சி 3-ஆம் பக்கம்

## கந்தசஷ்டி விழா விரிவுரைகள்

நல்லை மதுரைத் திருஞானசம்பந்தராதீனத் தலைவா ஸ்ரீ ல ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் அவர்கள் ஆதீனத்தில் கந்தசஷ்டி வரத நாட்களில் தினமும் பி ப 3 மணியளவில் முருகப் பெருமான் பெருமைகளை பிரசங்கஞ் செய்து வருகின்றார்கள்.

நல்லூர்க் கந்தசுவாமிகோயில் திருக்கலியாண மண்டபத்தில் தினமும் 8-30 மணி தொடக்கம் கந்தரனுபூதியைப் பற்றி விரிவுரைகள் புரிந்து வருகின்றனர்

x x x

### திருமுறை வகுப்புகள்

ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளையும், பண்ணிசைச் செல்வர் திரு. இராஜசேகரன் அவர்களது மாணவன் செல்வன் க. சிவபாலனையும், திரு. S. கணேசசுந்தரத்தையும்ஆசிரியர்களாகக்கொண்டு திருமுறை வகுப்பு நடைபெறும்

x x x

கந்தசஷ்டி விரதம் அநுட்டிப்பவர்களுக்கு 12-11-72 காலை 6-30 மணிக்கு பாரணைசெய்ய வசதிகள் செய்யப்பெற்றிருக்கின்றது. பாரணைச்செலவு உபயம் ஸ்ரீ. மார்க்கபந்து அவர்கள் கல்கிக் காரியாலயம், சென்னை.

வ
சைவபரிபாலனசபை வெளியீடு
வென்றிமலைக் கவிராயர்
இயற்றிய
திருச்செந்தூர்ப் புராணம்
யாழ்ப்பாணத்து நீர்வேலி
ஸ்ரீமத். ச. சிவப்பிரகாச பண்டிதர் அவர்கள்
எழுதிய உரையுடன் கூடியது
350 பக்கங்கள் கொண்டது.
விலை ரூபா: 10/—
கிடைக்குமிடம்:
சைவப்பிரகாச அச்சியந்திரசாலை
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

# சமய பாடக் கல்வி

## திட்டம் திருத்தப்படுமாம்

நாட்டில் சமயக் கல்விப் பாடத்திட்டத்தை திருத்தியமைக்க கல்வியமைச்சு ஐந்து உப குழுக்களை அமைத்துள்ளது. இந்து சமயப்பாடத் திட்டத்தைத் திருத்தியமைக்கும் உப குழுவுக்கு திரு. மு. வைரவிப்பிள்ளை அவர்கள் தலைவராகக் கடமைபுரிவார். புதுச் சமயபாடத் திட்டம் அடுத்த 1973 ஜனவரி தொடக்கம் ஆரும் பிரிவிலிருந்து ஒன்பதாம் பிரிவுவரை படிப்படியாகக் கற்பிக்கப்பெறும்.

பொதுவாக இதுவரை பாடசாலைகளில் பாவிக்கப்படும் சில சமயபாட நூல்கள் பிள்ளைகளுக்குக் கடினமான பாஷையில் பிரசுரஞ்செய்யப் பெற்றுள்ளனவென்றும், கருத்துக்கள் பிள்ளைகள் கிரகிக்க முடியாதனவாயுள்ளனவென்றும், பாடங்களைப் படிப்பிக்கும் முறையிலும் படிக்கப்படவேண்டிய விஷயங்களின் அளவிலும் மாற்றங்கள் செய்யப்படுதல் அவசியமென்றும் கருதப்படுகின்றன. ——

## சக்தியின் பெருமை

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

அன்னையின் வடிவத்தில் அடியார்களால் சொல்லப்பட்ட சக்தி, பெற்றதாயினுஞ் சாலப் பரிந்து பாவியேமுடைய ஊனினை உருக்கி உள்ளொளியைப் பெருக்குகின்றது. உலகில் உயிர்கள் மலபந்தத்தால் கட்டுப்பட்டுத் தம் நிலையிதுவென அறியாது மயங்கிக் கிடக்கின்றன. அவ்வாறு மயங்கிக் கிடக்கும் உயிர்களுக்குப் பரிந்திரங்கித் தன் கோலத்தைக் காட்டுகின்றாள் சக்தியாகிய அன்னை உயிர்களை ஓடி மீள்கென ஆடல் பார்த்திருப்பவள் அவ்வன்னை.

தன் சிறுவன் மலக்கட்டுப்பாட்டால் துன்பப்படும்போது அவனுக்கு மலக்கட்டு நீங்கப் பேதி கொடுத்துச் சுகம் அளிக்கும் உலகியல் அன்னைபோல் ஆணவமலக் கட்டுநீங்கப் பேதித்து நம்மை வளர்த்தெடுக்கும் பெய்வளை அன்னை பராசக்தி பேராவின்பத்தையடையச் செய்யத்தருணம் பார்த்துத் தன்னையடைந்தார் துயர்களையும் தலையாய தன்மையுடையவள்.

நான் எனும் அகந்தைச் செருக்காலும எனது எனும் பற்றுக் கயிற்றாலும் பிணிப்புண்டு தட்டுத்தடுமாறி அலையும் உயிர் தன்னையடைந்து "அம்மா! என்றலற அள்ளியணைத்து ஆதரவு காட்டும் அம்மை அவள். அவள் தானே வந்து தலையளித்து ஆட்கொள்ளுபவள். பேதித்துநம்மை வளர்த்தெடுக்கும் அன்னையவள் கருணைத் திறம் அளவிடற்கரியது. அப்பெருங் கருணைத்திறத்தை மணிவாசகப் பெருமான் உள்ளமெல்லாம் உருக எண்ணிப் பாடுகின்றார். எங்கோமான் அன்பர்க்கு அவள்முன்னே வந்து அருள் செய்யும் கருணைப் பிரவாகம்போல் மழையைப் பொழியும்படி வேண்டுகின்றார். அவள் திருமேனியழகினைத் தெய்வத் தமிழ்க்கவிதையழகில் சித்திரித்து மழையைப் பொழியும்படி ஆடுவோம் என்று எம்மை ஊக்குவிக்கின்றார்.

முன்னிக் கடலைச்சுருக்கி
யெழுந்துடையாள்
என்னத் திகழந் தெம்மை
யாளுடையாளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம்
பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற்
சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்
தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா
எங்கோமான் அன்பர்க்கு.
முன்னி அவள் நமக்கு
முன்சுரக்கு இன்னருளே
என்னப் பொழியாய்
மழையேலோ ரெம்பாவாய்.

அம்மையின் அருள்பெற்று அவள் பெருமையைக் கூறிய அடியவர் பலர். தாயின் அன்பிற்காக ஏங்கியழுத சேய்களாகிய அடியார்களின் பாடல்கள் நவில்தொறும் நாவிற்கு இன்பமும் உயிர்க்கு உறுதுணையும் பயப்பன. திருக்கடவூர் அபிராமிப்பட்டர் அவள் அருள் பெற்ற பேரருளாளர். சரபோஜிமன்னன்முன் அவள் அருள்பெற்றுத் தாம் கூறிய வாக்கை நிறைவேறச் செய்தவர். அன்னைபராசக்தியாவர்க்கும் அன்னையாக விளங்குவதோடு இறைவனுக்கும் மனைமங்கலமாகியும், அன்னையும் ஆகினாள் என்ற பெருமையைப் பெரிதும் பாராட்டியுரைக்கின்றார்.

தவளே இவள் எங்கள்
சங்கரனார்மனை மங்கலமா
மவளே யவர் தமக்கன்னையுமா
யின ளாகையினு
லிவளே கடவுளர் யாவர்க்கு
மேலை யிறைவியுமாந்
துவளே னினியொரு தெய்வ
முண்டாக மெய்த் தொண்டு
செய்தே.

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து இவ்வுலகமெங்கும் நிற்கும் அன்னை அவ்வுலகத்தினின்றும் தானே தனியாகவும் நிற்கின்றாள். அவ்வாறு நிற்கும் அன்னை தன் அடியவர்தம் உளளத்து என்றும விட்டு நீங்காது உயிர்க்குறு துணையாய் நின்று அருள் புரிகின்றாள்' அவள் தானே வலிய வந்து தமமையும் ஒரு பொருளாகக் கருதி ஆண்டு கொண்டு, அவள்தன்னை அறியும் அறிவையும் தந்த கருணையை எண்ணி எண்ணித் தாம் அடைந்த பேற்றின் பெருமையைப் போற்றியுள்ளார் அபிராமிப்பட்டர்.

நாம் உலகில் வாழ்வதற்குப் பொருள் அவசியம். "பொருள் இலார்க்கு இவ்வுலகமில்லை" என்பது பொய்யாமொழி. இப் பொருளும் நல் வழியால் வருவதற்கு நல்லூழும் வேண்டும். நல் வழியால் வராத பொருள் நம்மைப் மீழாப் பழியில் வீழ்த்திவிடும். பழி பாவத்துக்கு அஞ்சிப் பொருள் தேட நல் அறிவு அவசியம். அறிவின்றிப்பொருள்தேடும் மார்க்கம் புலப்படாது. கற்க வேண்டியவற்றைக் கசடறக் கற்கும் கல்வியே ஒருவர்க்கு அறிவைத் தருவது. இவ்வறிவே எம்மைச் சென்றவிடத்துச் செலவிடாது தீது அறியச் செய்து நன்றின்பால் உய்ப்பது. இவ்வறிவைப் பெற்றவர் பொருளைப் போற்றிப் பாதுகாத்துப் பயன்பெறுவர்

அறிவு இருந்தால் மட்டும் பாதுகாப்பு உண்டாகாது. எது வரினும் சித்தம் கலங்காத தளராத மனம் வேண்டும். தளர்வறியா நெஞ்சு அறிவுடன் சேர்ந்தால்தான் பூரண பாதுகாப்பு எப்போதும் உண்டு. என்றும் தளர்வறியா மனம் உடையவரே அறிவுடைய வீரர் துன்பத்தைக் கண்டு பயப்படுபவர் மூடர். துன்பங்களுள் எல்லாம் அதி துன்பமயமானது மரணம். மரணம் நிச்சயமானது என அறிந்திருந்தும் மரணத்துக்கு அஞ்சுபவர் துன்மதி மூடர்.

(வளரும்)

## தமிழ்மொழி

1ம் பக்கத்தின் வளர்ச்சி

மொழி உபயோகத்துக்கு சட்ட ரூபமான அதிகாரம் வழங்குவதற்கு தேசிய அரசியற் றிட்டத்தில் சட்டம் அமைக்கப் பெறுதல் வேண்டும். மந்திரிமார்களுடைய உத்தரவுகள் தமிழ் மொழி உபயோகத்துக்கு நிரந்தரமான உத்தரவைப் பெறப்பிக்க மாட்டா. தமிழ்மொழி உபயோகத்துக்கு ஏற்பட்டுள்ள தடைகள் நீக்கப் பெறுதல் வேண்டும். சிங்கள மக்கள் எவ்வாறு தங்கள் தாய்மொழி உபயோகத்துக்கு உரிமை பெற்றிருக்கின்றார்களோ அந்தளவு உரிமையைத் தமிழ் மக்கள் தங்கள் மொழியை உபயோகிக்க வழி வகுத்தல் வேண்டும். சிங்கள மொழி உத்தியோக மொழியாகவிருந்தபோதிலும் தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழியில் கடமையாற்றவும் மற்றும் உரிமைகளை அநுபவிக்கவும் வழி வகுத்தல் சிங்கள மக்களுடைய கடமையாகும். நாட்டில் நீதி, ஒப்புரவு, சனநாயக உரிமைகளைப் பேணுவதால் நாட்டின் வளம் பெருகும். 'ஒற்றுமையுண்டானால்நாம்வாழ்வோம்-பிளவுண்டானால் நாடு துன்பமடையும்' என்ற வாக்கியத்தை நினைவூட்டுகின்றோம்" இவ்வரிய கருத்துக்களமைந்த ஒரு அறிக்கையை ஷெ குழு சமர்ப்பித்திருக்கின்றது.

## வரவு செலவுத் திட்ட விவாதம்

2-11-72 ல் வரவுசெலவுத்திட்ட விவாதம் நிகழ்வதென முதலில் தீர்மானிக்கப்பட்டது. பின்பு 9-11-72 க்கு தவணை போடப்பட்டது. மீண்டும் மேற்படி விவாதம் 10-11-72 க்குத் தவணை போடப்பட்டது. வரவு செலவுத் திட்டத்தை ஆராய்வதற்கு ஐக்கிய முன்னணியின் கூட்டம் ஒன்று விவாதத்திற்கு முன்புகூட்டப்பட்டது.

—0—

# திருக்குறள் THE GREAT KURAL

## பொருட்பால்

[அமரரான யாழ் / நல்லூர் சிவபக்தமாமணி திரு. ச. சூரசங்காரன் L. L. B (London) நீதிதுரந்தரர் எழுதிய "திருக்குறள் உரைத் தொகை" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. — ஆசிரியர்

அதிகாரம் 98 பெருமை - Greatness
குறள் 971 (முற்றொடர்-22)

* ஒளியொருவற் குள்ள வெறுக்கை ** யிளியொருவற் கஃதிறந்து *** வாழ்து மெனல்.

1. ஒருவனுக்கு ஒளியானது பிறரால் செய்தற்கரிய செயல்களைச் செய்வோம் என்று கருதும் ஊக்கமிகுதி. ஒருவனுக்குச் சிறுமைவது அத்தகைய செயலை ஒழிந்து வாழ்வோம் என்று கருதுதலாகும்.

1. Greatness in a man consists of the abundance of energy that makes him aspire to achieve what others cannot do. Littleness in a man is the result of thought that he could live happy without such aspiration for any noble achievement.

2. ஒருவனுக்குப் பெருமையைத் தரக்கூடியது தன்னம்பிக்கையே ஆகும். ஒருவனுக்கு இழிவு தருவது அப்பண்பை ஒழித்து வாழவேண்டும் என்று எண்ணுவதேயாகும்

2. Self reliance is the quality that confers greatness on a man. One brings disgrace on himself if he thinks that he can live without such quality in him.

3. ஊக்கமாகிய செல்வமே ஒருவனுக்கு ஒளியைத் தருவதாகும். அதனை விட்டு வாழவோம் என்று கருதுதல் ஒருவனுக்குத் தாழ்வு தருவதாகும்

3. Glory consists in wealth of spirit. Devoid of it life is bound to be inglorious.

* ஒளியொருவர்க், ** இளியொருவர்க் என்பது காலிங்கர் பாடம் *** வாழும் என்பது மணக்குடவர் பரிப்பெருமாள் பாடம். ஒளி என்பது தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை என்றும், செயற்கரிய செய்வார் பெரியர் என்றாராயினும் ஈண்டு அவை அளவிறந்த ஒப்புரவு ஈகை முதலியவாம் என்றும், அவற்றினுய பெருமையை அதன் காரணத்தின் மேலிட்டுள்ள வெறுக்கை என்றும் அது தன்னையே அதன் காரியமாகிய ஒளியாக்கியும் கூறினார் என்றும் விளக்கும் பரிமேலழகர் உரையைத் தழுவியது. முதலாவது உரை உள்ளவெறுக்கை என்பதற்கு மனப் பெருமை என்றும், வாழுமெனல் என்பதற்கு வாழுமென்று பிறர் சொல்லுதல் என்றும் உரை செய்வர் மணக்குடவரும் பரிப்பெருமாளும். உள்ள வெறுக்கை என்பதற்குத் தருமம் என்று பரிதியாரும், உயர்ந்த செல்வம் என்று பிறரும் பொருள்காண்பர். இயந்து என்பதற்கு அளவு கடந்து என்றும் பொருள் காண்பாருமுளர். ஒளி என்பது தான் உளகாலத்து ஒப்புரவு புகழென்பது தான் இறந்த காலத்தும் உளதாம் உரை. (வளரும்)


## Commission Sale

### கோட்டுக்கொமிஷன் விற்பனவுவிளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழக்கு. இல: 11339

1. கனகசேகரம் நடராசா.
2. பெண் சரஸ்வதி இருவரும் புலோலி கிழக்கு பருத்தித்துறை

எதிராக —வழக்காளிகள்

1. செல்லம் alias K. இளையதம்பி கைம்பெண் செல்லமுத்து, புலோலி கிழக்கு பருத்தித்துறை
2. இளையதம்பி ஆறுமுகம, புலோலி கிழக்கு பருத்தித்றை தற்காலம் 26/1 யோசப் ஒழுங்கை பம்பலப்பிட்டி, கொழும்பு.

—எதிராளிகள

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதனகீழ் விபரிக்கப் பட்டிருக்குமாதனத்தை 1972 ம் ௵ டிசம்பா மாதம் 27-ஆம் திகதி (27—12—72) புதன்கிழமை முற்பகல் 9-30 மணிதொடக்கம் குறித்த ஆதனத் திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

ஆதன விபரம்

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோயிற்பற்று புலோலிகிழக்கு சிங்கபாகுதேவன் குறிச்சியிறை "தச்சனகலட்டி" நி பர 17½ ஷெ வீடு 1 இவைகளில் 1ம் பிரிவில் அரைவாசியும் 2ம் பிரிவில் மூன்றிலொரு பங்கும் சேர்ந்த காணிகக நி. பர 9 குளி 3½. இதற்கு ஆட்சியிலுள்ள நி பர 10. இதில் தெறகரைவாசிக்கு நி. பர 5 பனைகள், தென்னைகள், இலந்தைகள், வேம்புகள், கமுகள், பலாமரங்கள் கிணறும். எல்லை கிழக்கு நாகப்பர் பெண் பொன்னுவுக்கும் மறுபேருக்கு முடையவாதனம். வடக்கு எனக்குடைய வடக கரைவாசி மேற்குரேட்டு தெற்கு ஜோன பரமு ஆறுமுகம் பெண் வனனி இராசம்மாவுக்கும் மறுபேருககுமுடைய வாதனம். இவ் வெல்லைக்குட்பட்டவைகள் முழுவதும் கிணற்றில் அரைவாசியும் ஆனால் வடககரைவாசிககாரர் இககிணற்றிற்கு போக்குவரவு செய்யும் வழியுரிததும் வாய்க்காலுரித்தும் புறநீங்கல (மதிப்பிட்ட விலை ரூபா 10,625/-)

| | | | |
|---|---|---|---|
| தீர்வைத்தொகை | ரூபா | 8,455 | 53 |
| வட்டி ரூபா 5,000/க்கு 8வீதப்படி 26-4-71 தொடககம் 7-4-72 வரை | ரூபா | 426 | 25 |
| வட்டி ரூபா 8,881/78 க்கு 5 வீதப்படி 8-4-72 தொடக்கம் விற்பனவுத் திகதி வரை | ரூபா | 319 | 37 |
| கோட்டுச் செலவு | ரூபா | 290 | 41 |
| மொத்த | ரூபா | 9,491 | 56 |

ந. மூத்துலிங்கம்
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பாளர் ஏல விற்பனையாளர்,
303, 10-11-72

'குமரகோட்டம்'
வியாபாரிமூலை,
பருத்தித்துறை. 2—11-72

# நாடகக்கலையைத் தெய்வீகக் கலையாக்குதல் வேண்டும்

**"நாடகங்களில் சிலர் இன்று சமயநிந்தனைபுரிகின்றனர்கள்; சிவ சின்னங்களைத் தரித்துக்கொண்டு, சிவவேடப் பொலிவுடன் மேடையில் நடிக்க முன்வருவோர் சிலர், அவ்வேடத்தைத் தாங்கும் தகுதி, ஒழுக்கம் தமக்குண்டா? எனச் சிந்திக்கிறார்களில்லை -- நமது அருங் கலைகளைப் பேண அறிஞர்கள் முன்வரவேண்டும்; கலைவளர்ச்சிக்குழைப்போரை யூக்கவேண்டும்."**

இவ்வாறு அண்மையில் நிகழ்ந்த நாடக விழாவொன்றுக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போது யாழ், நாயன்மார்கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகச் செயலாளர் திரு கா. இரகுநாதன் குறிப்பிட்டார். இவ்விழா அரியாலை நாயன்மார்கட்டு பாண்டியன் துறையில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞான வைரவர் கோயில் திருப்பணி வளர்ச்சிக்காக மேற்படி ஆலய பரிபாலன சபையால் நடாத்தப் பெற்றது. இவ்விழாவில் திரு க. சொக்கலிங்கம் [சொக்கன்] அவர்களும், இளைப்பாறிய ஆசிரியர் சைவப்பெரியார் திரு. க. சுப்பிரமணியம் அவர்களும் உரை நிகழ்த்தினர். உரையரங்கை யடுத்து மூன்று நாடகங்கள் இடம்பெற்றன. தலைவர் தொடர்ந்து பேசும்போது குறிப்பிட்டதாவது:-

"நாடகங்கள் ஒரு நாட்டின் அகவளர்ச்சியையும், நாகரிகத்தையும் பண்பாட்டையும் பிரதிபலித்து மக்கள் செய்யவேண்டிய கடமைகளையும் நினைவூட்டி வழி காட்டக்கூடிய சாதனம் ஆகும். நாடகங்களை வளர்க்க வேண்டும் என்றெல்லாம் பலரும் இன்று பேசிவருகிறார்கள், ஆனால் நாடகக்கலை வளர்ந்திருக்கிறதா? அவற்றின் மூலம் நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோமா என்ற கேள்விகள் எழும்போது சிறிது தயக்கத்துடனேயே பதிலளிக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம்.

நாங்கள் தமிழர்கள் என்ற உணர்வு இருக்க வேண்டும். நமது இனம் புராதன பாரம்பரியத்தையுடையது. தமிழராய்ப் பிறந்த பாக்கியம் பெற்ற நாங்கள் எங்கள் மூச்சிலும் செயலிலும் இத்தமிழக் கலைகளையும் இணைத்தே வளர்ந்து வந்திருக்கிறோம்.

உதாரணமாக நாடகத்துறையில் விரசமான பேச்சுக்களை நாடகத்தில் புகுத்துபவர்களையும் நாம் ஆதரித்து வந்ததாலும், நற்கருத்துக்களைப் போதிக்கும் நாடகங்களுக்கு மதிப்பளிக்காதவர்களாக நாம் இருப்பதாலும் அவற்றின் வளர்ச்சியை தடைப்படுத்தவும் காரணமாயிருக்கிறோம். இந்நிலை நிச்சயமாக மாறவேண்டும். எங்கள் பண்பாட்டுடன் கூடிய தனித்தன்மையுடைய நாடகங்களுக்கு நாம் பெருமளவில் ஆதரவளிக்க வேண்டும். செல்வந்தர்கள் நாடக மன்றங்களை ஆதரிக்க முன்வர வேண்டும். இரசிகர்கள் சிறந்த நடிகர்களை முன்னணியில் கொண்டுவரவேண்டும். இதே போன்று நாடகாசிரியனின் பொறுப்பான கடமையை நாம் ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். ஒருவன் நாடகாசிரியன் என்றால் அவனைக் கேலிக் கண்கொண்டு பார்க்கும் நிலையை நாம் அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் அவர்கள் ஒரு சமுதாயத்தை, நாகரிகவழியிலோ, அநாகரிக வழியிலோ ஆத்திகவழியிலோ, நாத்திகவழியிலோ, ஆக்கத்திற்கோ, அழிவிற்கோ திசைதிருப்பிக் கொண்டு போகக்கூடியவர்கள்.

நமது அரசு இன்று எத்தனையோ துறைகளில் பணத்தைச் செலவு செய்கின்றது. ஆனால் கலைவளர்ச்சிக்காகப் போதியளவு வசதிகள்செய்யப்படவில்லையென்ற குரலும் கேட்கத்தான் செய்கிறது; கலை வளர்ச்சிக்கு அரசின் உதவி தாராளமாகக் கிடைக்கவேண்டும் என்பதும் அரசின் உடைமைகளாகிய திரைப்படப் பிரிவு, வானொலி போன்ற சாதனங்கள் கலை வளர்ச்சிப் பிரசாரத்துக்கு அதிகமாகப் பயன்படுத்தவேண்டும் என்பதும் எனது விருப்பமாகும். நாடகத் துறையில் அநுபவமும் அபிமானமுங்கொண்ட பெரியார்களுடைய ஆலோசனைகள் திரட்டப்பட்டு வானொலிமூலம் பிரசாரம்செய்யப் படுதல் விரும்பத்தக்கது. கலைஞர்கள் சமுதாயத்தை மதித்து, எந்தச் சந்தர்ப்பத்திலும் அதன் ஆக்கத்திற்குப் புறம்பான வகையில் செயற்படுவதில்லையென உறுதியெடுத்தல் வேண்டும், அத்துடன் எந்தவிதமான பேதமுமின்றி நாட்டில் கலைப் பரிவர்த்தனை நடைபெற வேண்டும். முக்கியமாக நாடகங்கள், தனிமனிதனது வாழ்க்கைக்கும், எமது வருங்காலச் சந்ததியினருக்கும் வழி காட்டியாக அமைய வேண்டும் இப் பணியை நாடகாசிரியர்கள் சிரமேற்கொள்ளும் அதே வேளையில் பண்டைக்கால சரித்திரங்களையும் காவியங்களையும் அவர்கள் புறக்கணித்துவிடுதல்கூடாது எமது வரலாற்றில் இன்றைய காலகட்டத்தைப்போன்று தமிழினம் என்றுமே சோம்பிக் கிடந்ததை நாம் காணமுடியாது. ஆகவே நாம் முயற்சியுடையோராக மாறி *எங்கள் மொழியுணர்ச்சி, கலையுணர்ச்சி, வாழ்க்கை முறை என்பவற்றை எவ்வாறு வளம்படுத்தினோம் என்பதில், எமது வருங்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமைய, நற்றொண்டுகளைப் புரிவோமாக! நாடகக் கலையின் புனிதத் தன்மையைப் பேணி வளர்த்து வருவோமாக! தமிழர்தம் கலைகளை வளர்த்துவரும்மன்றங்களையும் அபிமானிகளையும் வாழ்த்தி எனது சிற்றுரையை நிறைவு செய்கிறேன்*

---

**வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

---

*யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 10—11—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது*

**பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்**

---

## ஸ்ரீ வில்லூன்றி விநாயகர் தேவஸ்தானம்

நிகழும் பரிதாபி ஞூ கார்த்திகை மாதம் 6-ந் நாள் (21-11-72) செவ்வாய்க்கிழமை முதல் 21 தினங்களுக்கு விநாயகசஷ்டி விரதத்தை முன்னிட்டு விசேஷ அபிஷேக ஆராதனையும், பூசையும் முக்காலங்களிலும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

கார்த்திகை மீ 26 ஆம் நாள் திங்கட்கிழமை (11-12-72) மாலை 4 மணிக்குப் பெருங்கதைப் படிப்பும அபிஷேகமும் 6 மணிக்கு விநாயக சஷ்டி உற்சவமும் நடைபெறும்,

---

## நல்லைச் சிவன் கோயில் யம சம்ஹாரம்

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

புக் கூட்டுத்தாபனத் தமிழ்ப்பிரிவு ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பை எதிர்வரும் 13 - 11 - 72 காலை 7-00 மணிக்கு நேயர்கள் கேட்கமுடியும் எனவும் அறிகிறோம் இதை இருமுறை மும்முறை ஒலிபரப்புவது நலமாகும் நல்லைச் சிவன்கோவிலுக்கு கோவிலவீதி வழியாக வெளித்திருவீதி அமைக்கும்பணியிலும் சைவப் பெரியோர்கள் ஈடுபட்டுளளார்கள்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 பொன்னம்பலம் சிவநாதனும் பெண்
2 சொர்ணமும் மானிப்பாய் —வழக்காளிகள்.

இல M B 10811 *எதிராக*

1 துரைசிங்கம் சடாச்சரமும் பெண்
2 குணபூஷணியும் நவாலி — எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக்கோட்டின் M B 10811-ம இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் 3 துண்டுக் காணிகளை 1972 ம ஞூ மார்கழிமீ 9 ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம அந்தந்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 3512/-ம் 17-5-69 தொடக்கம் 12-11-69 வரைக்கும் ரூபாய் 2000/- க்கு 10 வீத வட்டியும அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 296-00 ம், இதில் ரூபா 1296/- *நீக்கி.*

### ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை 'தளுவில் வயல்' நி, பர 5. எல்லை கிழக்கும் வடக்கும் குளந்தைவேலு பெண் நாகமுத்துவின் ஆதனம், மேற்கு திலலையம்பலம் முதலியாரின் உரிமையாளருக்குரிய ஆதனம். தெற்கு வீதி, இவையடங்கலும் அதற்குரிய கிணற்றுப்பங்கும் வழிவாய்க்கால் உரிமையுடன Regd E 104/167.

2 ஷெ இறை 'தளுவில் வயல்' செ. பர. 8. எல்லை கிழக்கும் வடக்கும் கந்தர் நன்னித்தம்பியின் ஆதனம். மேற்கு இராமு நலலதம்பியின் உரிமையாளருக்குரிய ஆதனம், தெற்கு நாகா மருதரின் ஆதனம். இவையடங்கலும Regd E 356/246.

3. ஷெ இறை 'தளுவில்வயல்' செ. பர. 7 எல்லை கிழக்கு மயில்வாகனம் இராசரத்தினத்தின் ஆதனம், வடக்கு வயித்திலிங்கம் இராசையாவின் ஆதனம், மேற்கு சின்னத்தம்பி பொன்னம்பலத்தின் ஆதனம், தெற்கு வீதி இவையடங்கலும Regd E 300/70,

**J. A. எட்வேட்**
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை. 9-11-72

304 10-11,

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்

1 ஆறுமுகம் கந்தையா
2. பெண் ஞூச பரமேஸ்வரி இருவரும் தெல்லிப்பளை மேற்கு தற்போது A5 Govt Flats திமபிரிகஸையா — வழக்காளிகள.

வழ. இல எம. பி. 11105 எதிராக

1. கந்தையா கனகசபை உடுவில் —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11105-ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1972-ம ஞூ மார்கழி மீ 4-ஆம் திகதி திங்கட்கிழமை (4-12-72) முற் பகல் 10 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப் படும.

தீர்வைத் தொகை முதல் வட்டி ரூபா 4764-00 சதம். இன்னும் ரூபா 3500-00 க்கு 16-9-69 தொடக்கம் 1-6-70 வரைக்கும் 10 வீத வட்டியும் அதன பின் முழுத் தொகைக்கும் இறுக்கும வரை 5 வீத வட்டியும் இதில் கோட்டுச் செலவு ரூபா 328-95 கொடுபட்டுள்ளது. ரூபா 3794-36 கொடுபட்டுளளது. ரூபா 480-00 4-2-72 ல் கொடுபட்டுள்ளது. ரூபா 500-00 19-5-72ல கொடுபட்டுள்ளது

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோயிற்பற்று உடுவில் இறை "அரசோலை, வன்னியப்பா பெருமாள வளவு" பர. நில, இலா 22. V. C. செய்பயிர் வாண்டயிர் வீடும் இதற்கு எல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தையா கைம்பெண் நாகமுத்துப் பிள்ளையின் ஆதனமும் வடக்கு கந்தையா கைம்பெண் நாகமுத்து பிள்ளையின் ஆதனமும் ஒழுங்கையும் தயா சாமுவேலுக்குரிய ஆதனமும், அமரிக்கன மிசனுக்குஉரியஆதனமும், தெற்கு அமரிக்கன மிசனுக்குஉரியஆதனம. இதடங்கலில பிரிவிடப்படாத ¼ பங்கும் அதன் சொத்து உரிமைகளும்.

பதிவு இல H 150/40.

**ப. நா. தருமலிங்கம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

*167/1, கோவில் வீதி,*
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம், 3-11-72.

எம். 305 10-11.

---

## நாவலர் தினம்

*1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி*

சைவபரிபாலன சபை, நாவலர் சபை, நாவலர் மகாவித்தியாலயம் ஆகிய ஸ்தாபனங்கள் சிறப்பான முறையில் கொண்டாடுவர். மற்றும் பல பாடசாலைகளும், மன்றங்களும் இத்தினத்தைக் கொண்டாடுவர். ந நி

---

**இன்றைய நிகழ்ச்சி ஒழுங்குகள்**

பிற்பகல் 3-00 **மணி:** மார்க்கண்டேயர் பூசை, **4-00 மணி:** மகாலிங்கத்திற்கு **வசந்தமண்டபத்தில்** விசேடபூசை, **ஆராதனை,** திருவீதிஉலாக்காட்சி.
6-00 மணிக்கு திருவிழாப் பூர்த்தி. (ந நி.)

---

**வரப்போகின்ற தென்றது ...**

## வந்தேவிட்டது!

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

இலவச அரிசி இனி வரியிறுப்போருக்கில்லை என்பது கலகலப்பான புதினம். எனினும் வரவர இவ் வரியிறுப்போராக மாற வேண்டியவராவார் இலவச அரிசியை இனி அனுபவிசகப் போகின்றவர் என்பது மறைபொருள்.

ஒன்றுமட்டும் உவகையை ஊட்டுகிறது. பேரவை அங்கத்தவர்களுக்கு இப்பொழுது சிறிது காலமாகக் கொடுபடும் கூட்டமொன்றுக்கு ரூபா ஐம்பது சன்மானம் தானாகவே நின்றுவிடுமென்பது. தன்மானத்துக்கு இந்தச் சன்மானம் ஆகாதென்பது யாவருமறிவர்.

மோட்டார் வாகனத்திற் சிறீ பொறித்தவர்களுக்குச் சிறிது சீற்றம் ஏற்படலாம். சிறீ இலக்கம் வேண்டுமா? சிக்கனம் வேண்டுமா ... ......?

---

**சிவயோகசுவாமிகள்**

## நூற்றாண்டு விழா

**சைவ மங்கையர் சபைக்குப் பாராட்டு**

சென்ற புதன்கிழமை மாலை ஸ்ரீ இராமநாதன் கல்லூரியில் நிகழ்ந்த நூற்றாண்டு விழாவிலே தலைமை தாங்கிய காரைநகர் சிவ ஆச்சிரமத் தலைவி திருமதி தங்கம்மா நடராசா அம்மையார் தமக்கென வாழாத் தகைமை மிக்க வள்ளல் இராமநாதனின் பெருங் கொடையாக நிறுவப் பெற்ற மகளிர் கல்லூரியின் விழாவாக சைவமங்கையர்சபை சிவயோக சுவாமிகளின் நூற்றாண்டு விழாவை நடாத்த முற்பட்டமை மிகவும் பாராட்டப்பட வேண்டிய பணியென்று குறிப்பிட்டனர்,

நிகழ்ச்சியில் மிக முக்கியமான அம்சங்கள் நற்சிந்தனைப் பாடல்கள் பாராயணம் செய்யப் பெற்றதும் திருமதி இரத்தின நவரத்தினம் அவர்கள் இயற்றிய நூல் வெளியிடப்பெற்றமையும் ஆகும்.

---

**கீரிமலை பிதிர்க் கடன்....**

1ம் பக்கத்து வளர்ச்சி

*தொடர்ந்து புரிவதற்குச் சைவ மக்களின் உதவி வேண்டப் படுகிறது. நிதி உதவ விரும்புவோர் குறித்த மடத் தர்மகர்த்தாவிடம் அல்லது இந்துசாதனக் காரியாலயத்திலும் பொருளை உதவலாம், பற்றுச்சீட்டு உடனே வழங்கப்பெறும்,*